

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.7.2023) முகாம் அலுவலகத்தில், இலங்கை நாட்டின் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆ. ஜீவன் தொண்டமான் அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார், சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தின் துணைத் தூதர் டாக்டர் வெங்கடேஸ்வரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 2 பேருந்துகள் மோதல்: 6 பேர் பலி

மும்பை, ஜூலை 31- மராட்டியத்தில் 2 ஆம்னி பஸ்கள் நேருக்குநேர் பயங்கரமாக மோதிக்கொண்ட விபத்தில் 6 பேர் பலியாகினர். மராட்டிய மாநிலம் ஹிங்கோலி பகுதியை சேர்ந்த பக்தர்கள் சிலர் ஒரு ஆம்னி பஸ்சில் அமர்நாத் யாத்திரைக்கு சென்றனர். பின்னர் அவர்கள் ஹிங்கோலிக்கு திரும்பினர். பஸ் மல்காபூர் பகுதியில் உள்ள நந்தூர் நாகா மேம்பாலத்தில் வந்து கொண்டிருந்தது. எதிரே நாசிக் நோக்கி தனியார் ஆம்னி பஸ் ஒன்று வந்துகொண்டிருந்தது. இந்த பஸ் முன்னால் சென்ற லாரியை முந்த முயன்றதில் இவ்விபத்து ஏற்பட்டது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### இளைஞர் அணி மாநாட்டிற்காக

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் ரூ.51 லட்சம் நிதி!

## இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் வழங்கினர்!



கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. ஆகியோர் முன்னிலையில் இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், இளைஞர் அணி மாநாட்டிற்காக, அணியின் துணை செயலாளர்களான எஸ்.ஜோயல், இன்பா என்கிற ரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன், க.பிரபு, ஜி.பி.ராஜா, சி.ஆனந்த் குமார் ஆகியோர் ரூ.51 லட்சம் நிதி அளித்தனர்.

### தி.மு.க மாணவர் அணி

# நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பாளர் -துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு !

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பிற்கு ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர்/பழங்குடியின இனத்தைச் சேர்ந்தவராகவும் மற்றும் பெண் துணை அமைப்பாளர் ஒருவரும் இருப்பது அவசியம்.

ஒரு துணை அமைப்பாளர், கண்டிப்பாக தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவராக இருத்தல் அவசியம்.

இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள், மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால், அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம்.

30 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.

நியமிக்கபடவுள்ள நிர்வாகிகள் அனைவரும் கல்லூரி/டிப்ளமோ படிப்பை முடித்தவராகவோ அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடியவராகவோ இருத்தல் அவசியம்.

முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தோ, மாவட்டக் கழகத்திடமிருந்தோ அல்லது வலைதள முகவரியிலிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்பி, பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் கழக உறுப்பினர் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை / ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழின் நகல் இணைப்பது அவசியம்.

முழுமையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மாவட்டக் கழகத்திலோ, மாவட்ட அமைப்பாளரிடமோ, தலைமைக் கழகத்திலோ ஆகஸ்ட் மாதம், 10ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 06.00 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்புகளுக்கான அமைப்பாளர்துணை அமைப்பாளர்கள் நேர்காணல், அந்தந்த மாவட்டத்திலேயே மாநில மாணவர் அணி நிர்வாகிகளால் நடத்தப்படும். நேர்காணல் நடைபெறும் நாள், நேரம், இடம் மாவட்டக் கழக செயலாளருடன் கலந்து பேசி பின்னர் தெரிவிக்கப்படும்.

ஒன்றிய கிளைகள், நகரபகுதிபேரூர் வார்டுகளில் மாணவர் அணி நிர்வாகிகளைத் தேர்வு செய்வது குறித்த அறிவிப்பு பிறகு வெளியிடப்படும்.

விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்ய: http://surl.li/jmwoy

மேலும் தொடர்புக்கு:
முகநூல் https://www.facebook.com/EzhilarasanCVMP
டுவிட்டர் https://twitter.com/EzhilarasanCvmp

"அண்ணா அறிவாலயம்,"
சென்னை18.
நாள்: 29-07-2023

**சி.வி.எம்.பி. எழிலரசன்**, எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

## கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜூலை, 31- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பா க்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்தின் இறுதிக்கட்ட பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ராகுல் நாத், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர். ஜி.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் உதயா கருணாகரன், தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர்.சீனிவாச ராவ் மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில்

# மாணவ - மாணவிகளிடையே கதர் - கைத்தறி ரகங்கள் பிரபலப்படுத்தும் திட்டம்!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி - இராணிப்பேட்டை ஆர்.காந்தி துவக்கி வைத்தனர்!

ஈரோடு, ஜூலை 31 - ஈரோடு மாவட்டம், சித்தோடு, ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் (IRTT) (24.07.2023) அன்று கைத்தறித்துறையின் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே கதர் மற்றும் கைத்தறி ரகங்களை பிரபலப்படுத்தும் திட்டத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா தலைமையில், அரசு முதன்மைச் செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை தர்மேந்திர பிரதாப் யாதவ் துணிநூல் துறை ஆணையர் முனைவர்.மா.வள்ளலார், கைத்தறி துறை ஆணையர் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கே.விவேகானந்தன், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி. சு.நாகரத்தினம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈவெகிச.இளங்கோவன் (ஈரோடுகிழக்கு), ஏ. ஜி.வெங்கடாச்சலம் (அந்தியூர்), ஆகியோர் முன்னிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வின்போது, அமைச்சர் சு.முத்துசாமி பேசியதாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் வளர்ச்சிக்காக எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்களின் நலனுக்காக பிற மாநிலங்கள் பின்பற்றும் வகையில் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்கள். அதில் குறிப்பாக, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து வசதி, பெண்களின் உயர்கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் அரசு பள்ளியில் படித்து கல்லூரி செல்லும் மகளிருக்கு மாதம் தலா ரூ.1,000/ வழங்கும் புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட திட்டங்களும், இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக பெண்களின் நலனுக்காக பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/- பெறும் திட்டத்திற்காக விண்ணப்ப படிவங்கள் பெறும் முகாமினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தர்மபுரி மாவட்டத்தில் துவக்கி வைத்ததை தொடர்ந்து தமிழகம் முழுவதும் இம்முகாம் நடைபெற்று வருகிறது. மேலும், கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நெசவாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் பவானியில் துவக்கி வைக்கப்பட்டது. அதே போன்று பவானி சாலை, அசோகபுரம் பகுதியில் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் புதிய ஸ்டென்டர் இயந்திரத்தின் சேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், கைத்தறித் துறையின் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே கதர் மற்றும் கைத்தறி ரகங்களை பிரபலப்படுத்தும் திட்டம் குறித்த விழிப்பு ணர்வு கூட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. மாணவ, மாணவியர்கள் மற்றும் இன்றைய தலைமுறையினர் அதிக அளவில் கைத்தறி ரகங்களை பயன்படுத்தி நெசவாளர்களின் வாழ்வு மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென தெரிவித்தார்.

இதில் சித்தோடு, அரசு பொறியியல் கல்லூரி, எஸ்.எஸ்.எம், வாசவி, பாரதிதாசன் ஆகிய கல்லூரிகளை சார்ந்த சுமார் 600க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். மேலும் கைத்தறி நெசவாளர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ், மானிய தொகையாக 12 நபர்களுக்கு தலா ரூ.4.00 இலட்சத்திற்கான வீடுகள் கட்டுவதற்கான ஆணையினையும் மற்றும் முத்ரா கடனுதவி திட்டத்தின் கீழ், 11 நபர்களுக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிலான கடனுதவிகளையும் மற்றும் கைத்தறி ரகங்கள் தொடர்பாக கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே நடைபெற்ற வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார்கள். மேலும், கைத்தறி இரகங்களின் பாரம்பரியத்தை பொது மக்களிடையே பிரபலப்படுத்தும் வகையில் கைத்தறி இரகங்கள் காட்சிப்படுத்தப்பட்ட நகர்வு பேருந்தின் சேவையினையும் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

தொடர்ந்து, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பவானி, கூடுதுறை ரோட்டரி ஹால் திருமண மண்டபத்தில், கைத்தறிதுறை மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் நடைபெற்ற நெசவாளர்க ளுக்கான சிறப்பு மருத்துவ முகாமினையும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், ஆஸ்துமா, சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், இதயம் மற்றும் எழும்பு சம்மந்தப்பட்ட நோய்கள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இசிஜி, எக்ஸ்ரோ மற்றும் ஸ்கேன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டது. இம்முகாமில் 530 ற்க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி.ந வமணி, துணைத் தலைவர் திருமதி.கஸ்தூரி, மாநகராட்சி 1ம் மண்டல குழுத் தலைர் பழனிச்சாமி, ஈரோடு சரக உதவி இயக்குநர், பெ.சரவணன், தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையின் உதவி இயக்குநர்/மேலாண்மை இயக்குநர், பொ.தமிழ்செல்வன், கைத்தறி துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் பொறையாத்தா கடை தெருவில் வசித்து வரும் 107 வயது நிறைந்த கு.கோபாலகிருஷ்ணன் என்ற ஓய்வூதியர் அவர்களின் இல்லத்திற்கு, நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 27.07.2023 அன்று நேரில் சென்று பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார். உடன், கருவூல கணக்கு துறை ஆணையர் கே.விஜயேந்திர பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) ரஞ்சித்சிங், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன் நாகப்பட்டினம் சார் ஆட்சியர் பானோத் ருகேந்தர் லால் ஆகியோர் உள்ளனர்.

# பெண்களின் கவுரவத்துடன் பா.ஜ. விளையாடுகிறது!

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 31- மணிப்பூரில் கடந்த மே 4ம் தேதி இரண்டு பெண்களை ஒரு கும்பல் நிர்வாணமாக அழைத்து சென்றது , பா.ஜ. எம்.பி. பிரிஜ்பூஷன் சரண் சிங்,மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த சம்பவம், பில்கிஸ் பானு கூட்டு பலாத்கார வழக்கு குற்றவாளிகள் அனைவரும் விடுதலை செய்தது தொடர்பான செய்திகள் தொடர்பான வீடியோக்களை இணைத்து ராகுல்காந்தி தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில், பெண்களுக்கு உரிய மரியாதை அளிக்காத எந்த நாடும் முன்னேற்றம் அடையாது. அதிகார பேராசையால், பெண்களின் மதிப்பு மற்றும் நாட்டின் சுயமரியாதை ஆகியவற்றுடன் பா.ஜ. விளையாடுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

**ஏழை, பணக்காரன் இடைவெளி அதிகரித்துவிட்டது**

ஜூலை 20 அன்று காய்கறி விற்பனையாளர் ஒருவர், காய்கறிகளின் விலையேற்றத்தால் தனது துயரங்களைச் சொல்லும் வீடியோவை ராகுல் வெளியிட்டு,' நாடு இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒருபுறம், ஆளும் ஆட்சியால் பாதுகாக்கப்படும் சக்தி வாய்ந்தவர்கள் உள்ளனர். மறுபுறம் பொதுவான இந்தியர்கள் உள்ளனர். அவர்களுக்கு காய்கறிகள் போன்ற அடிப்படை விஷயங்கள் கூட கிடைக்காமல் போகிறது. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே விரிவடைந்து வரும் இந்த இடைவெளியை நாம் குறைக்க வேண்டும். இந்த கண்ணீரை துடைக்க வேண்டும்' என்று டிவிட் செய்துள்ளார்.

### மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில்

# பெண்களின் பங்களிப்பு குறைந்து வருகிறதா?

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 31- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறைந்து வருவது ஏன்? அதை சரி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும், ஏப்ரல் 2022 முதல் ஜனவரி 2023 வரை மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் (MGNREGS) பணிபுரிந்த பெண் தொழிலாளர்களின் சதவீதம் என்ன? என்றும், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த ஒன்றிய ஊரக வளர்ச்சித்துறை இணைய மைச்சர் சத்வி நிரஞ்சன் ஜோதி "மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது குறையவில்லை என்றும் இது திறன்சாரா உடல் உழைப்பு செய்ய விரும்பும் கிராமப்புற நபர்கள் பங்கேற்கும் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும்



வேலைவாய்ப்பு திட்டம்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் (MNREGA 2005), பயனாளிகளில் குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பகுதியினர் பதிவு செய்து வேலை கோரிய பெண்களாக இருக்கும் வகையில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்பது பாலின பாகுபாடு இல்லாத நடுநிலையான ஒரு திட்டமாகும். இது ஆண்களுக்கு இணையான ஊதியத்தை வழங்குவதன் மூலம் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிக்கிறது. பெண்களுக்கான ஊதிய விகிதங்களின் தனி அட்டவணையை வழங்குதல், குழந்தை காப்பகத்திற்கான வசதிகள், குழந்தைகளுக்கான வேலை பக்க கொட்டகைகள் மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் போன்றவையும் செய்து தரப்படுகிறது. தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்துடன் (NRLM) இணைந்து பெண்களுக்கென்று தனி குழுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் பெண்களின் பங்கேற்பை எளிதாக்கியுள்ளது. இத்திட்டம் பய னாளிகளின் குடியிருப்புக்கு அருகிலேயே பணிகளை வழங்கவும் முயற்சிக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது 85.65 சதவிகிதமாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.